அசல்

17.6.23. நாகலிங்கத் தம்பிரான்.

அசல் - 1

உ

சிவமயம்

ஸ்ரீ காசி

17-6-23

சிந்த நாதன் பதம். எந்த நாளுந் துணை.

அன்பேயுருவாயமைந்தருளிய
ஸ்வஸ்ரீ வேதமூர்த்திகளான ஐயர்
வாள் அவர்கள் திவ்விய சமூகத்துக்கு
அடியேன் நாகலிங்கன் மனோவாக்காதிக
ளால் வழிபட்டுத் திக்கு நோக்கி அநேக
ங் கோடி வந்தனஞ் செய்து எழுதிக்கொ
ள்ளும் அதிவிநய விஞ்ஞாபனம்.

சுவாமிகளது ஆசீர்வாதத்தால்
ஈண்டு அநேகம். சுவாமிகளது ஆரோக்
கியத்தை அடிக்கடி அறிய விரும்புகின்
றேன்.

சுவாமிகள் அடியேனையும் ஒரு பொ
ருட்டாக எண்ணிக் கருணை கூர்ந்து
அனுப்பிய கடிதமும் புக் போஸ்டும்
15-உ வெள்ளிக்கிழமை கிடைத்தன.

மதாநுருதுகர்வம் வீழ்ந்தத்திட வல்லன்
றேனே - யாமென வியம்பலாலெம் மல்லம
தேவனுண்மை - நாமமுமனைய வேறேற்
நாமமொன்றமாமாயக்குக் - காமியமின்
ய்ப்பயன்றன் கணைப்பிடத்தருளவெண்ணி,

என்றபடி, அடியார்க்கெட்டாக்கியும்
அருட்கரச் சுந்தரப்பொருப்பாகிய
ஆலவாய்ப்பிரான் அடியேனுக்கு
ஸ்ரீயத்தி விளங்காக்கண்டு,

17.6.23. நாகலிங்கத்தம்பிரான்.

அசல் – 1



தேவரீர் குருவாயெழுந்தருளிக் கேட்ட
ளியிட்ட குறிப்பென்றே நிச்சயித்
துத் தாங்கள் திருத்தியனுப்பியவண
்ணத்தையும் அவ்வாறேயமைத்துக்கொ
ண்டேன். சுவாமிகள் கட்டளையிட்டது
அதுபோன்ற மற்றவைகளையும்; அடி
யேனது சிற்றறிவுக்கெட்டியவரை
அவ்வாறே திருத்திக்கொள்வேன்.

சரசுவதி துதியை.

"பண்டாரணுசரணையப்பாடப்பாக்கிய
ஞ்செய்யாதிங்ஙு - மண்டலத்தினிலுதித்த
மதியிலார்க்குந்தம்மைக் - கண்டருள்
கொண்டெனக்குக் கலைவளனளிக்கும் வெ
ள்ளை - முண்டகமானைப் போற்றி முப்
பொழுதேத்துவாமே,"

என்று திருத்திக்கொண்டேன்.

யமுனாநதி சங்கமமாவதற்குமுன்று
ள்ளது அத்தகங்கையென்று (அனைவருங்) கொண்
டாடுகின்றனர். மேலும், அத்தனையே
கொண்டுவந்து பூஜை முதலாகிய சிறப்
புகள் செய்வதும், அயோத்தி காதிகளுக்கு
வாசசுதமென்று உபயோகிப்பதுமாயி
ருக்கின்றனர். அது காரணம்பற்றியே,

"பொலிந்திலங்குசெறிக்கும்வளமுடைக்கங்
கைதன்னிற் - காலிந்திமடுத்துமிந்தக்
காசியாலதிகமென்றே - மேலிந்தியங்கள்
வென்றமுனிவருரைப்பரென்னிற் - கோ
லிந்திரன்றன்மெச்சுங்குணமுமாரியம்
பார்குற்றம்,

17.6.23. நாகலிங்கத்தம்பிரான்.

அசல் — 1



என, அவையடக்கத்திற் கூறலாயினேன்,
அஃது சுவாமிகளுக்குத் திருப்தியில்லாமை
யால்,

காசிரகசியம் புண்ணிய கீர்த்தித்திறமென்
ற அத்தியாயம் 57-வது செய்யுள்.

“காசியே கிரகமாகக் - கொண்டங்க
ணுறையாநிற் பேயாம்,” என்று கங்கா
தேவி திருவாய்மலர்ந்தருளியதாய்ச்
சூதமுனிவர் கூறுதலாலும், மற்றுஞ் சில
விடங்களிற் கங்கைக்குக் காசிக்ஷேத்திர
த்தில் மகத்துவம் அதிகமென்று கூறுதலா
லும், கங்காயாத்திரை செல்லுவோர்
மற்றுந் தலங்களைக் கருதாமல் காசிக்ஷேத்
திரத்தையே நாடிச் செல்லுதலாலும்,

“காசிநீத்திமருத்து மன்னார்க்காசியிலதி
கமென்றோ,” என்று திருத்திக்கொண்டேன்.
அஃதும் சுவாமிகளுக்குச் சம்மதமில்லை
யாயின், இரண்டாவது செய்யுளுக்கு நோ
க்காமல்,

“முன்னமோர் புலவன் சொன்ன மூதுரைத்
துதியேயன்றிப் - பின்னரும் யேசுகின்ற
ப் பீடுறு காசியுள்ளார் - பன்னயான் பாட
முற்ற பண்புமற்றன்றோ பாவி - என்ன
யமுனார்த்தலோடு நிகையாமினாக்
குமன்றோ,”

என்றமைத்துக் கொள்ளுவேன்.

காசிகாண்ட வசனம் எழுதிமைந்தவுடன்
இங்குள்ள சிவநேசச் செல்வர்களுடைய

நூலாசிரியர் பாராட்டுக்களைச் சத்திக்கவேண்டும், அவை மெய்யானவையாயிருக்கச் செய்யு
ட்களைக் காணின் திருத்துக்கும் உவமையாக்க வேண்டுமென்பது அவை யெனது கருத்து
சுவாமிகள் தாமத்தையும் கவர்ந்து கொள்வேன்

அசல்

17.6.23. நாகலிங்கத்தம்பிரான்.

அசல் — 1

4 ~~16-1~~ 17-6-23

காசிராகியத்தைக் இவ்வாறே வசனமா
யெழுதவேண்டுமென வாரம்பித்தேன்.
அதனால், அடியேனது சிற்றறிவுக்கெட்
டியவளவு சில செய்யுட்களை யியற்றி
வசனமுமொருவாறு எழுதத்துணிந்தேன்.
அச்செய்யுட்களையிதனுடன் சேர்த்து ஸ்
வாமிகளது பார்வைக்கு அனுப்பியிருக்
கிறேன். அடியேன் கிருதார்த்தனாகும்
வண்ணம், ஸ்வாமிகள் அதனைப்பார்வை
யிட வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

925 வழிபடுகடவுள்வணக்கத்திற்குப் பீடி
கை யென்று தலைக்குறிப்பிட்டிருக்கின்
றேன். அஃது அவ்வாறேயிருக்கலாமா?
அல்லது, வழிபடுகடவுள்வணக்கமென்
று திருத்திக்கொள்ளவேண்டுமா?
இவ்வாறிடுதல் உசிதமானதென்று
தோன்றவில்லை. அதனால் ஸ்வாமிகளது அபி
ப்பிராயத்தை யெதிர்பார்க்கிறேன் (86)

அடியேன் ஸ்வாமிகளது [illegible]
று ஸ்வாமிகளுக்குவேண்டிய சௌகரிய
ங்களைச் செய்யாமல் அடிக்கடி சிரம
ங்கொடுக்குங் குற்றத்தை மன்னித்தரு
ளுவதோடு; அடியேனது தகுதிக்கு மேம்ப
ட செய்கையைச் செய்யத்துணிந்த
இக்குற்றத்தையும் மன்னித்தருளும்படி
மிகவுந் தாழ்ந்த வணக்கத்துடன் அநேகங்
கோடி வந்தனஞ் செய்து வேண்டிக்
கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்
அடியேன்
நாகலிங்கத்தம்பிரான்

த. க. VOL 'A' P. 351–357.